1987 நவம்பர் 16]

ஊராட்சி ஒன்றியத்தினுடைய மருந்தகம் இருந்தால் அங்கே மருத்துவ மனை ஏற்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எனவே, இந்தச் சித்த மருந்தகத்தை வேறு பகுதிக்கு மாற்றி, அந்தக் கொள்கையைத் தளர்த்தி அங்கே ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் அல்லது மருத்துவமனை ஏற்படுத்துவதற்கு அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவத்தில் நம்பிக்கை வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். சித்த மருத்துவம் சிறந்து ஓங்கி வளர்ந்துவரும் ஒரு மருத்துவம் ஆகும். இதிலே அரசு நம்பிக்கை வைத்திருக்கிறது. மேலும், சித்த மருத்துவ மனையை அப்புறப்படுத்திவிட்டுதான் நவீன மருத்துவ மனை ஆரம்பிக்க வேண்டும் என்பதில்லை. அதைத் தனியாக ஆரம்பிக்கலாம். சித்த மருத்துவம் நடைபெற்று வருவது ஊராட்சி ஒன்றியத்தினால் நடக்கிறது. தனியாக ஆரம்பிப்பது என்றால், அரசுதான் ஆரம்பிக்க வேண்டும். அதைப் பற்றி தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரலாம்.

கஞ்சனூர் மருத்துவமனைக்கு அதிகாரிகள் நியமித்தல்.

120—(*வினா எண். 2343) திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தாலுக்கா, திருப்பனந்தாள் ஒன்றியத்தைச் சார்ந்த கஞ்சனூர் கிராமத்தில் கட்டப்பட்ட அரசு மருத்துவமனை இரண்டு ஆண்டுகளாக மருத்துவ அதிகாரிகள் இல்லாத காரணத்தினால் செயல்படாமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): கஞ்சனூர் கிராமத்தில் ஊரக மருந்தகம் ஒன்று இயங்கி வருகிறது. இங்கு பணிபுரிந்த மருத்துவர் ஓய்வு பெற்றுவிட்டபடியால் தகுதியான நபர் பணி மேற்கொள்ள முன்வராமையால் மருத்துவ அதிகாரி பணியிடம் காலியாக உள்ளது. தற்போது பந்தநல்லூர் ஊராட்சி ஒன்றிய மருத்துவர், கஞ்சனூர் மருந்தகத்தின் பணியினை கவனித்து வருகிறார்.

திரு. மு. ராசாங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கஞ்சனூரில் இயங்குகின்ற இந்த மருத்துவமனையில் முழு நேர மருத்துவரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா? அதே நேரத்தில் ஒரு ஆண்டுக்கு எத்தனை ரூபாய்க்கு மருந்துகள் அங்கே செலவழிக்கப்படுகின்றன என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மருந்தகம் ஆகும். அதுபற்றிய முழு விவரம் தற்போது என்னிடம் இல்லை. ஊராட்சி ஒன்றியம்தான் மருத்துவரை நியமிக்க வேண்டும்.

திரு. மு. ராசாங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி சுமார் ஐம்பது கிராமங்கள் அடங்கியதாகும். அங்கே மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையம் 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால்தான் இருக்கிறது. ஆகவே, அங்கே ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பச் சுகாதார நிலையம் பற்றி தனிக் கேள்வி போட வேண்டும். 145 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்க இருக்கிறோம். அப்போது இதைப்பற்றி எழுதிக் கொடுத்தால் அரசு பரிசீலிக்கும்.

இடைக்கோடு ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக மாற்றல்.

121— (*வினா எண். 4515) திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுக்கா இடைக்கோடு ஆரம்பச் சுகாதார நிலையத்தை படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாக மாற்ற அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைக்கோடு ஆரம்ப சுகாதார நிலையம் 6 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனைகளில், ஆரம்பச் சுகாதார நிலையங்களில், டாக்டர்கள் இல்லாமல் இருக்கிறார்கள். 6 படுக்கை வசதிகள் இருக்கின்றன என்று சொன்னாலும் கூட, அந்தப் பகுதியிலே ஒரே ஒரு மருத்துவமனைதான் ஒரு பஞ்சாயத்திலே இருக்கின்றது. அதிகமான வசதி செய்து கொடுக்க